## September 13, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாட்டின் 15-ஆவது குடியரசு துணைத்தலைவராக தமிழகத்தைச் சேர்ந்த சி.பி. ராதாகிருஷ்ணன் (67) பதவியேற்றார்.
   i. அரசமைப்புச் சட்டத்தின்படி, குடியரசு துணைத் தலைவராக இருந்தவர் ராஜிநாமா செய்தாலோ, உயிரிழந்தாலோ புதிதாக தேர்வு செய்யப்படும் குடியரசு துணைத் தலைவர், தான் பதவியேற்கும் நாளிலிலிருந்து முழுமையான ஐந்து ஆண்டு காலம் பதவி வகிப்பார். அதன்படி, சி.பி.ராதாகிருஷ்ணன் 2030, செப். 11 வரை பதவி வகிப்பார்.
   ii. தமிழகத்தின் திருத்தணியைச் சேர்ந்த சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், தஞ்சையைச் சேர்ந்த ஆர்.வெங்கட்ராமன் ஆகியோருக்கு அடுத்து தமிழகத்திலிருந்து மூன்றாவது நபராக சி.பி.ரா தாகிருஷ்ணன் நாட்டின் இரண்டாவது உயரிய குடியரசு துணைத்தலைவர் பதவியை ஏற்றுள்ளார்.
2. நேபாளத்தின் இடைக்காலப் பிரதமராக (இடைக்கால அரசின் தலைவர்) உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி சுசீலா கார்கி நியமிக்கப்பட்டு, உடனடியாகப் பதவி யேற்றுக்கொண்டார்.
   i. நேபாள உச்சநீதிமன்றத்தின் முதல்பெண் தலைமை நீதிபதிஎன்ற சிறப்புக்குரிய சுசீலா கார்கி (73), இப்போது நாட்டின் முதல் பெண் பிரதமர் என்ற புதிய வரலாற்றையும் படைத்துள்ளார்.
3. தங்கள் அமைச்சரவையின் ஊழல் தடுப்புத் துறைக்கு உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளதாக அல்பேனிய பிரதமர் எடி ராமா கூறினார்.
   i. சூரியன்' என்று பொருள்படும்'டியெல்லா' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஏஐ அமைச்சர் அரசு ஒப்பந்தங்களை 100 சதவீத ஊழல் இன்றி உறுதிப்படுத்தும் பணிகளையும், அவற்றை விரைவாகவும் வெளிப்படையாகவும் செயல்படுத்துவதற்கு உதவுவார் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
   ii. இந்த ஆண்டு தொடக்கத்தில் இ-அல்பேனியா தளத்தில் மரபு உடையில் உதவியாளராக அறிமுகமான டியெல்லா, தற்போது அமைச்சராக உயர்வு பெற்றுள்ளது. 1990-இல் கம்யூனிஸ்ட் வீழ்ந்த பிறகு அல்பேனியாவில் ஊழல் மிகப்பெரிய பிரச்னையாக இருந்து வரும் நிலையில் டியெல்லாவுக்கு இந்த பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
4. பிரேஸிலில் தனது பதவியைத் தக்கவைக்க சட்டவிரோத கும்பல்களுடன் சேர்ந்து சதிச்செயலில் ஈடுபட்டதாக அந்த நாட்டு முன்னாள் அதிபர் ஜெயிர் பொல்சொனா ரோவுக்கு 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
   i. இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுவந்த வழக்கில், பொல்சொனாரோ மீதான குற்றச்சாட்டுகளை ஐந்தில் நான்கு நீதிபதிகள் உறுதி செய்தனர். இதன் மூலம் அரசுக்கு எதிரான சதிச்செயலில் ஈடுபட்ட குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள, பிரேஸிலின் முதல் முன்னாள் அதிபராக பொல் சொனாரோ ஆகியுள்ளார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்ய முடியும்.
5. நாட்டில் 1,107 (21%) எம்.பி., எம்எல்ஏக்கள், மேலவை உறுப்பினர்கள் (எம்எல்சி) குடும்ப அரசியல் பின்னணி உள்ளவர்கள் என்று ஜனநாயக சீர்திருத்தத்துக்கான சங்கம் (ஏடிஆர்) ஆய்வில் தெரியவந்துள்ளது.
   i. அதில், 'தேசிய கட்சிகளைச் சேர்ந்த 3214 எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள், மேலவை உறுப்பினர்களில் 675 (20%) பேருக்கு குடும்ப அரசியல் பின்புலம் இருக்கிறது.
   ii. நாடு முழுவதும் உள்ள 5,204 எம்.பி., எம்எல்ஏ-க்கள், மேலவை

உறுப்பினர்களின் விவரங்களின் அடிப்படையில் இந்த ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

iii. அதில், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 32%, பாஜக உறுப்பினர்கள் 17%, ஆம் ஆத்மி 11%, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் 8% உள்ளனர்.

iv. அதிகபட்சமாக மக்களவையில் 31% குடும்ப அரசியல் பின்புலம் உள்ளவர்கள் இருக்கின்றனர். மாநிலங் களவையில் 21%, மாநில மேலவைகளில் 22 % குடும்ப அரசியல் கொண்டவர்கள் உள்ளனர்.

6. இந்தியாவின் நீரஜ் சோப்ரா உள்ளிட்ட பலர் பங்கேற்கும் உலக தடகளசாம்பியன்ஷிப், டோக்கியோவில் சனிக்கிழமை (செப்.13) தொடங்குகிறது.

7. இஸ்ரேல், பாலஸ்தீனத்தை தனித்தனி நாடுகளாக அங்கீகரிக்கும் தீர்மானத்துக்கு ஆதரவாக ஐ.நா. பொதுச் சபையில் இந்தியா வாக்களித்தது.

i. பாலஸ்தீன விவகாரத்துக்கு அமைதியான முறையில் தீர்வு கண்டு, இஸ்ரேலையும் பாலஸ்தீனத்தையும் தனித்தனி நாடுகளாக அங்கீகரிக்கும் 'நியூயார்க் பிரகடனத்தை' ஆதரித்து கொண்டுவரப்பட்ட தீர்மானம் மீது ஐ.நா.பொதுச் சபையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

ii. பிரான்ஸ் அறிமுகம் செய்த அந்த தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா உள்பட 142 நாடுகளும், எதிராக 10 நாடுகளும் வாக்களித்தன. 12 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. தீர்மானத்துக்கு எதிராக அமெரிக்கா, ஆர்ஜென்டீனா, ஹங்கேரி, இஸ்ரேல் உள்ளிட்டநாடுகள் வாக்களித்தன.

8. சுரங்க விபத்துகள் நேரி டும்போது தொழிலாளர்களுக்கு வழங் கப்படும் இழப்பீட்டை
ரூ.15 லட்சத் தில் இருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தி வழங்க பொதுத்துறை நிறுவனமான கோல் இந்தியா நிறுவனம் முடிவு செய் துள்ளதாக மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் ஜி.கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

i. நிலக்கரித் துறையில் மேலும் அதிக அளவிலான சீர்திருத்தங்களைச் செய்ய மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது. அரி கனிமங்களின் துரப்பணப்பணிக்காக ரூ.32,000 கோடி மதிப்பிலான தேசிய அரியவகை கனிமங்கள் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் இணையுமாறு பொதுத் துறை மற்றும் தனியார் துறைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

ii. கனிமங்களைத் தேடி நாம் ஆர்ஜென்டீனாவிலும் ஜாம்பியாவிலும் துரப்பணப்பணிகளைத் தொடங்கியுள்ளோம்.

iii. ஆர்ஜென்டீனாவில் அரசுகளுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் மூலம் நாம் ஐந்து லித்தியம் சுரங்கங்களில் துரப்பணப்பணிகளைப் பெற்றுள்ளோம்.

iv. அதேபோன்று நம் நாட்டிலும் அரிய வகை கனிமங்களுக்கான துரப்பணப்பணிகளை தீவிரப்படுத்தியுள்ளதுடன் இதில் மாநில அரசுகளின் பொதுத் துறை நிறுவனங்கள், மத்திய அரசுகளின் பொதுத் துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவை பங்கேற்க ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

9. மிஸோரம், மணிப்பூர், அஸ்ஸாம், மேற்கு வங்கம், பிகார் ஆகிய ஆகிய 5 மாநிலங்களுக்கு சனிக் கிழமை (செப்.13) முதல் பிரதமர் மோடி பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்.

i. இந்த மாநிலங்களில் மொத்தம் ரூ.71,850 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கிவைப்பதுடன் புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டவிருக்கிறார்.

ii. மூன்று நாள்கள் பயணத்தின் முதல்கட்டமாக, வடகிழக்கு மாநிலமான மிஸோரமுக்கு செல்லும் பிரதமர் மோடி, தலைநகர் ஐஸாலில் நடைபெறும்

நிகழ்ச்சியில் ரூ.9,000 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கிவைக்கவுள்ளார்.

iii. முக்கியத்துவம் வாய்ந்த பைரபி-சாய்ராங் இடையிலான அகல ரயில் வழித்தடத்தை திறந்து வைப்பதுடன், ஐஸால்-தில்லி ராஜதானி ரயில் சேவை, ஐஸால்- கொல்கத்தா, ஐஸால்-குவாஹாட்டி புதிய ரயில் சேவைகளையும் தொடங்கிவைக்கிறார்.

iv. மத்திய அரசின் கிழக்கு நோக்கிய கொள்கையில் முக்கிய அங்கமான பைரபி-சாய்ராங் வழித்தடம், நாட்டின் பிற பகுதிகளுடன் ஐஸாலுக்கு ரயில் இணைப்பை வழங்குகிறது. இதன்மூலம் நாட்டின் ரயில் கட்டமைப்பில் மிஸோரம் முதல் முறையாக இணைக்கப்படுகிறது.

10. இந்தியாவின் ஓலைச்சுவடிகளை பழங்கால எண்மமயமாக்கல் செய்வது அறிவுசார் திருட்டைத் தடுக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

i. ஓலைச்சுவடிகள் "பழங்கால மூலம் இந்தியாவின் அறிவுசார் மரபை மீட்டெடுத்தல்' என்ற ஞான பாரதம் தலைப்பினாடில் பிரதமர் மேர்வு பங்கேற்றுப் பேசுகையில், 'சுதேசி மற்றும் தற்சார்பு இந்தியா என்ப தின் விரிவாக்கம்தான் ஞானபாரத மாகும்.

ii. பல நூற்றாண்டுகளாக ஓலைச்சுவடிகளில் பாதுகாக்கப்பட்ட பண்டைய கால அறிவை நவீன உலகுக்கு இந்தியா பெருமையுடன் வழங்குகிறது.

iii. தற்போது வரை 10 லட்சத்துக்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் எண்மமயமாக்கப்பட்டுள்ளன. இதற்காக பணியாற்றிய தனியார் நிறுவனங்களுக்கு பாராட்டுகள்.

iv. தாய்லாந்து, வியத்நாம், மங்கோலியா ஆகிய நாடுகளுக்கும் ஓலைச்சுவடிகளை எண்மமயமாக்க இந்தியா உதவி வருகிறது.

v. இந்தியாவின் முந்தைய பொற்காலத்தை மறுமலர்ச்சி செய்யும் வகையில் இந்த விழா அமைந்துள்ளது. உலகிலேயே அதிகபட்சமாக ஒரு கோடிக்கும் மேலான ஓலைச்சுவடிகளை சேகரித்த நாடாக இந்தியா திகழ்கிறது.

11. தமிழ்நாடு சுற்றுலாத் துறை, அக்குவா அவுட் பேக் அமைப்பு ஆகியன சார்பில் தேசிய அளவிலான கடல் சாகச விளையாட்டு போட்டிகள் தூத்துக்குடி முத்துநகர் கடற்கரையில் தொடங்கியது.

i. படகில் நின்ற நிலையில் துடுப்பு செலுத்துதல், அமர்ந்த நிலையில் துடுப்பு செலுத்துதல், கைட் சர்ஃபிங், பீச் வாலிபால், மாரத்தான், ஒய்ல்டு வாரியர் போன்ற போட்டிகளும் நடைபெறுகின்றன. இதில், பல்வேறு மாநிலங்களிலிருந்து சுமார் 200 பேர் பங்கேற்று விளையாடுகின்றனர்.